(ஏ) கோரிக்கை எண் 56—சாலைகள் — பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 56--சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 92,17,74,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர், அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள் (13-4-1994) புதன்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

100. சிரவணபெலகோலாவில் நடைபெற்ற விழாவினை முன்னிட்டு சிறப்பு அனுமதி பெற்று கர்நாடக மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட பொது வாகனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து

உள் (போ.6) துறையின் 27-12-1993-ஆம் நாளிட்ட 1840--ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

101. அமாவாசையை முன்னிட்டு மாதேஸ்வர மலைக்கு இயக்கப்பட்ட கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான ஐந்து பயணிகள் பேருந்துகளுக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து. உள் (போ.) துறையின் 17-12-1993-ஆம் நாளிட்ட 1789-ஆம் ஆண்டு அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

70. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய சாதனைத் திட்டம், 1993-94. (தமிழ், ஆங்கிலம்).

71. பாசனம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

72. தமிழ்நாடு, எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

73. பொதுப்பணித்துறையின் (கட்டடப்பிரிவு) பணிகள் பற்றிய ஆய்வுரை, 1993-94. (தமிழ், ஆங்கிலம்)

74. மானியக் கோரிக்கை எண் 38 மற்றும் எண் 56. தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய ஆய்வுரை — 1993-94, திட்டம் 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

75. பாசனம் மற்றும் நிலத்தடி நீர் பற்றிய சாதனைத் திட்டம், 1993-94. (தமிழ், ஆங்கிலம்).

76. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை பற்றிய வரவு--செலவுத் திட்டச் சாதனை. (தமிழ், ஆங்கிலம்).

77. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (ஏழாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

78. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (எட்டாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).